பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை – 600 028.

<u>மேலெழுத்து கடித எண்.20844/G2/2022 நாள்:01.07.2022</u>

முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் கடிதம் எண்.வ.நி.5(3)/19/10/2022 நாள்.03.06.2022 தகவலுக்காகவும் / உரிய பின்பற்றுதலுக்காகவும் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்(புலனாய்வு)

பெறுநர் :

1. அனைத்து சார்பதிவாளர்கள்,
2. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்.
3. அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்,

20844

பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம் 28 JUN 2022 சென்னை-600028

வருவாய் நிர்வாகம்
மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்

| | |
|---|---|
| அனுப்புநர் | பெறுநர் |
| முதன்மைச் செயலர் / | பொது ஆய்வாளர், |
| வருவாய் நிருவாக ஆணையர், | பதிவுத்துறை, |
| எழிலகம், சேப்பாக்கம், | 100, சாந்தோம் சாலை, |
| சென்னை–5. | பட்டினப்பாக்கம், சென்னை–28. |

ந . க . எண் வ . நி . 5(3)/19/10/2022 நாள் : 03 /06/2022

அய்யா,

பொருள்: சான்றிதழ்கள்– தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் முன்னேற்ற சங்கம்– முதல் திருமணச்சான்று குறித்த சுற்றறிக்கை வெளியிடக் கோரியது– தொடர்பாக

பார்வை–
1. அரசாணை (நிலை) எண் 260, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (வநி3(2)த்துறை, நாள் 17.08.2017.
2. தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் முன்னேற்ற சங்கத்தின் மனு நாள் 02.02.2022.

*******

பார்வையில் காணும் கடிதங்களின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2) தமிழ்நாடு கிராம நிருவாக அலுவலர்கள் முன்னேற்ற சங்கம் தனது பார்வையில் காணும் கடிதத்தில், சார் பதிவாளர் அலுவலகங்கள், இந்து சமய அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட கோயில்கள் ஆகியவற்றில் திருமணப் பதிவுக்காகவும், சமூகநலத்துறை அலுவலகங்களில் திருமண உதவி பெறுவதற்காகவும் சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் முதல் திருமணச்சான்று என்றும் சான்றினை கிராம நிருவாக அலுவலர்களிடமிருந்து பெற்று வருமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள் எனவும், முதல் திருமணச்சான்று என்ற சான்று வழங்க எவ்வித அரசாணையோ, அரசின் வழிகாட்டுதல்களோ இல்லாத நிலையில், கிராம நிருவாக அலுவலர்களும் பொதுமக்களை அலைகழிக்க கூடாது என்ற காரணத்திற்காக கிராம நிருவாக அலுவலர்கள் முதல் திருமணச்சான்று வழங்கி வருகின்றனர் எனவும், முதல் திருமணச் சான்று வழங்க அரசாணைகள் ஏதும் இல்லாததன்

காரணமாக மேற்படி சான்றிதழை கிராம நிருவாக அலுவலரிடம் பெற்று வருமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுவதை தவிர்க்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

3) வருவாய்த்துறை வாயிலாக முதல் திருமணச்சான்று வழங்குவது குறித்து அரசாணைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் ஏதும் வரையறுக்கப்படவில்லை என தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், திருமணமாகாதவர் சான்றிதழ் பார்வை 2-இல் காணும் அரசாணையின்படி வருவாய்த்துறையின் மூலம் நாளது தேதியில் இ-சேவை மூலமாக வழங்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

4) எனவே, பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை வரையறைக்குட்பட்ட கோயில்களில் திருமணப் பதிவுக்காகவும், சமூக நலத்துறையினர் திருமண உதவித் தொகை வழங்குவதற்கும் முதல் திருமணச்சான்றுக்கு பதிலாக வருவாய்த்துறையின் இ-சேவை வாயிலாக நாளது தேதியில் வழங்கப்பட்டு வரும் திருமணமாகாதவர் சான்றிதழை மனுதாரர்களிடம் பெற்று அதன் அடிப்படையில் நடவடிக்கை தங்களது துறையில் தொடர்புடைய அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறும் இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். மேலும் இனி வருங்காலங்களில் முதல் திருமணச் சான்று வழங்கக் கூடாது என கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/-ஆர்.சீத்தாலட்சுமி,
இணை ஆணையர் (வநி)
முதன்மைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையருக்காக.

15/6/22

முதன்மைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையருக்காக.

15/6/22